# <u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 178/2004

Deposition of **<u>D.W.-1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 06.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பாக்கியம் Father's Name : சீனன் (எ) அருணாச்சலம்

துவக்க நேரம் : 03.25P.M

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது சகோதரிகள் என்ன படித்துள்ளார்கள் என்றால் எனது மூத்த சகோதரி செல்வலட்சுமி 10-ஆம் வகுப்பும், எனது தங்கை உஷாராணி 11-ஆம் வகுப்பும் மற்றொரு தங்கை இந்திரா காந்தி 11 வகுப்பும் படித்துள்ளனர். எனது பிறந்த தேதி என்ன என்றால் 30.06.1957 ஆகும். எனது அக்கா செல்வலட்சுமி எப்பொழுது பிறந்தார் என்றால் 1950-ஆம் ஆண்டு பிறந்தார் தேதி ஞாபகம் இல்லை. மற்ற இரு சகோதரிகள் பிறந்த தேதி தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

2. எனக்கும், எனது சகோதரிகளுக்கும் பிறப்பு சான்று உள்ளதா என்றால் உள்ளது, ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஏன் அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் வழக்கு நாங்கள்

தாக்கல் செய்யவில்லை, அதனால் நாங்கள் ஒப்படைக்கவில்லை. 4-ஆம் பிரதிவாதி தனியாக வழக்கறிஞர் வைத்து இவ்வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை 4-ஆம் பிரதிவாதிக்கும் சேர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாள் நாகியம்பட்டி கிராமத்தில் எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை வசித்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாள் ராசிபுரத்தில் எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை வசித்து வந்தார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது, அப்பொழுது நான் சின்ன பிள்ளையாக இருந்தேன். எனக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் கடந்த 1974-ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. அப்பொழுது எனக்கு என்ன வயது என்றால் சுமார் 19, 20 வயது இருக்கும்.

4. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.13, சின்ன அக்ரஹாரம், ராசிபுரம் என்ற முகவரிக்கு நான் எப்பொழுதாவது சென்று பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனவே மேற்படி கதவு எண்ணில் எத்தனை வீடுகள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அப்துல் சர்தார் என்பவருக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சர்தார் சாயபுவின் மனைவி மற்றும் குழந்தைகள் தொடர்பான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. இறந்துபோன வாதி சுப்ரமணியன் எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு எந்த உறவும் இல்லை. 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாள் எனக்கு என்ன உறவு

என்றால் எனது தாயாரின் பெரியம்மாவின் மகள். பார்வதியம்மாளின் தாயார் பெயர் என்ன என்றால் பச்சையம்மாள் ஆகும். எனது தந்தை கடந்த 1965-ல் இறந்துபோன வாதி சுப்ரமணியத்திற்கு பதிலறிவிப்பு (பி.வா.சா.ஆ.1) அனுப்பியபொழுது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 10 வயது இருக்கும். பதிலறிவிப்பின் அசல் எங்கே என்றால் வழக்கறிஞர்தான் அறிவிப்பு அனுப்பினார் எங்களிடம் இருந்ததைதான் நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி அறிவிப்பை எனக்கு யார் மூலம், எப்பொழுது எனக்கு கிடைக்கப் பெற்றது என்றால் எனது தந்தை வருமான வரி செலுத்தியதற்கான கோப்புகளில் மேற்படி அறிவிப்பு இருந்தது. மேற்படி அறிவிப்பு கோப்புகளில் இருந்ததை நான் எப்பொழுது பார்த்தேன் என்றால் சமீபத்தில்தான் பார்த்தேன். எந்த தேதியில் நான் அவ்வாறு பார்த்தேன் என்று குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் கூற இயலாது.

6. மேற்படி அறிவிப்பில் இருந்த வருமான வரி கோப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அதில் உள்ள ஆவணங்கள் தனிதனியாக உள்ளது, அதனால் என்னால் தாக்கல் செய்ய இயலாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு இறந்து போன வாதி சுப்ரமணியன், எனது தந்தையின் மகன் இல்லை என்பதை நிரூபிக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இறந்து போன வாதி சுப்ரமணியன் சீனர் (எ) அருணாச்சல கவுண்டர் என்பவரின் மகன் என்பதால்தான் எனது தரப்பில் அது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

7. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 ஆன அப்துல் சர்தார் என்பவரின் இறப்பு சான்றிதழில் மனைவி என்ற இடத்தில் எந்த பெயரும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இறந்து போன வாதி சுப்ரமணியனின் தந்தை அப்துல் சர்தார் என்று கூறும் பட்சத்தில் அதை நிரூபிக்கும் கடமை

பிரதிவாதிகளாகிய எங்களையே சாரும் என்றால் சரியல்ல. எனது முதல் நிலை விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் நாகியம்பட்டி கிராமத்தில் ச.எண். 139/2-ல் உள்ள நிலத்திற்கு அருகில் 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளுக்கு சொந்தமான நிலம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி சர்வே எண்ணில் உள்ள நிலத்திற்கு 7-ம் பிரதிவாதி தனக்கும் உரிமையுள்ளதாக கூறி பட்டாவிலிருந்து தனது பெயரை நீக்கியதற்காக ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொண்டாரா என்றால் இல்லை.

8. ச.எண்.139/2-ல் உள்ள சொத்தானது இந்த வழக்கில் தாவா சொத்தாக சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்து தாவாவில் சேர்க்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. ச.எண்கள்.142, 132/7 மற்றும் 134/1-ல் உள்ள சொத்துக்களில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் ஆமாம், அது இவ்வழக்கில் தொடர்புடைய சொத்துகக்கள் ஆகும். மேற்படி சர்வே எண்களில் உள்ள சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று என்னால் கூற இயலுமா என்றால் கூற இயலாது. அதேபோல் மேற்படி சொத்துக்களில் எனக்கு உரிமை உள்ள சொத்துக்கள் எவ்வளவு என்றால் அதையும் என்னால் கூற இயலாது, ஆனால் அதில் எங்களுக்கும் உரிமை உள்ளது.

9. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.9 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் இறந்துபோன வாதி சுப்ரமணியன், சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் மகன் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதன்பேரில் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அதற்காக நடவடிக்கைகள் எவ்வாறு மேற்கொள்ள வேண்டுமென்று எங்களுக்கு தெரியவில்லை.

10. எங்களது தாத்தா பெயர் என்ன என்றால் முத்துக்குமாரசாமி. அவரது சகோதரி சிலம்பாயி அம்மாள் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தந்தை வழியிலும், தாய் வழியிலும் உறவு ஆவார். செல்லமுத்தியம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் எனது தந்தை வழி பாட்டி ஆவார். செல்லமுத்தியம்மாளின் தந்தை பெயர் என்ன என்றால் பூசாரி (எ) கருப்பழகி கவுண்டர் ஆகும். பூசாரி (எ) கருப்பழகி கவுண்டரின் 2-வது மனைவி சிலம்பாயி அம்மாள் என்றால் சரிதான்.

11. மேற்படி சிலம்பாயி அம்மாளுக்கு வாரிசுகள் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிலம்பாயி அம்மாளுக்கு ஏதேனும் அசையா சொத்துக்கள் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆனது அருணாச்சலக்கவுண்டர் மனைவி பார்வதியம்மாளுக்கு சிலம்பாயி அம்மாள் எழுதிக் கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆன தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் முத்துகுமாரசாமியின் பேரனும், சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் மகனுமான சுப்ரமணியத்திற்கு பூசாரி (எ) கருப்பழகி கவுண்டரின் மனைவியும், பழனிமுத்து கவுண்டரின் மகளுமாகிய சிலம்பாயி அம்மாள் எழுதிக் கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான், பத்திரத்தில் அவ்வாறு அவர்களே வாசகங்கள் போட்டு எழுதிக் கொண்டார்கள்.

12. மேற்படி வா.சா.ஆ-5, 22 ஆவணங்களை பற்றி எனக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் மேற்படி ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்கள் பற்றி விவரங்களை என்னுடைய வழக்கறிஞர் என்னிடம் தெரிவித்தாரா என்றால் தெரிவித்தார். மேற்படி 2 ஆவணங்களும் செல்லாது மற்றும் போலியானது என்று நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டோமா என்றால்

இல்லை. எங்களது தந்தைக்கு இறுதி சடங்குகளை யார் செய்தது என்றால் நாங்கள்தான் செய்தோம். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமோ என்றால் இல்லை, ஊர் வழக்கப்படி நாங்கள்தான் இறுதி சடங்குகள்தான் செய்தோம்.

13. எங்களது தந்தைக்கு எந்த தேதியில் கரும காரியம் செய்தோம் என்றால் எங்கள் தந்தை இறந்த 16-ஆம் நான் செய்தோம். நான் சொல்வது தவறு என்றாலும், இறந்துபோன வாதி சுப்ரமணியன்தான் சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் இறுதி சடங்கு மற்றும் கரும காரியங்களை செய்தார் என்றால் சரியல்ல, அவ்வாறு ஆவணங்களை ஏற்படுத்தி அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். சிலம்பாயி அம்மாள் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் பகை எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சிலம்பாயி அம்மாள் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.5, 22 ஆவணங்களில் சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் மகன் சுப்ரமணியன் என்று குறிப்பிட்டு எழுதிக் கொடுத்துள்ளார் என்றாலும், அது உண்மை என்பதால்தான் அவ்வாறு எழுதிக் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல.

14. இறந்து போன வாதி சுப்ரமணியத்தின் வாரிசுகளுக்கு சட்டப்படி கிடைக்கவேண்டிய சொத்துக்கள் கிடைக்கக்கூடாது என்பதற்காக மேற்படி சுப்ரமணியன், சீனன் (எ) அருணாச்சல கவுண்டரின் மகன் இல்லை என்று பொய்யாக வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 1955, 1956 ஆண்டுகளில் பிறப்பு சான்றிதழ் பதிவு செய்யும் வழக்கமும், விவரமும் இல்லாததால்தான் மேற்படி வாதி சுப்ரமணியன் மற்றும் எங்களுக்கும் பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. அந்த கால கட்டங்களில் பொதுவாக பிறந்த தேதியை பள்ளி ஆசிரியர்தான் முடிவு செய்வார் என்றால் சரியல்ல, ஒரு குழந்தை பிறந்தால் கண்டிப்பாக பிறப்பை பதிவு

செய்வார்கள். வாதிகள் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியது என்றாலும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதுமாக முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

முடிவு நேரம்:04.26 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.178/2004 , Dt.24.02.2026.